5th August 1966]

	மெட்ரிக் சிட்டங்கள் லட்சம்.
(2) நடுத்தர ரகம் :	
ஆங்கில நெம்பர் 19-லிருந்து 24 வரை (அதாவது) மெட்ரிக் நெம்பர் 31-லிருந்து 41 வரை.	121·88
(3) உயர்ந்த ரகமும் மிக உயர்ந்த ரகமும் :	
ஆங்கில நெம்பர் 25-ம் அதற்கு மேலும் (அதாவது) மெட்ரிக் நெம்பர் 42-ம் அதற்கு மேலும். (ஒரு சிட்டம் 1,000 மீட்டர்கள்)	44·00
	கிலோ கிராம்கள்.
(இ) நெட்டிழைப் பருத்தி	4,35,707·060
சிற்றிழைப் பருத்தி	2,48,021·299

பதநீர் பற்றிய செய்திப் படம்

**132 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—*

(அ) இந்த ஆண்டில், காதி இலாகாவினால் பதநீர் அருந்து வதைப்பற்றி பிரசாரம் செய்ய செய்திப் படம் ஏதேனும் தயாரிக் கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்தப் படம் தயாரிக்க எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டுள்ளது ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) & (இ) சென்னை மாநில கதர் கிராம கைத்தொழில் போர்டினால் இந்த ஆண்டில் பதனீர் பிரசாரம் செய்ய செய்திப் படம் எதுவும் தயாரிக்கப்படவில்லை. ஆனால், சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் 1964-65-ல் "குறைவற்ற செல்வம்—பதனீர்" என்ற செய்திப் படம் ஒன்று தயாரித்துள்ளது. இதற்கான செலவுத் தொகை ரூபாய் 17,221.52.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்தச் செய்திப் படத்தினால் சர்க்காருக்கு ஏற்பட்ட செலவைப்பற்றிச் சொன்னார்கள், இவ்வளவு செலவு செய்த படத்தின் மூலமாக ஏதாவது லாபம் ஏற்பட்டதா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இந்தச் செய்திப் படத்தை தயாரிப்பதற்கான செலவை இதற்குள்ள பெடரேஷன் கொடுத்திருக்கிறார்கள். அவ்விதம்தான் செய்திப் படம் தயாரிக்கப்பட்டது . . .

கனம் சபாநாயகர் : லாபம் ஏதாவது உண்டா என்று கேட்கிறார்கள்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இந்தப் படத்தைப் பார்த்து, அதிலுள்ள முறைகளைப் பின்பற்றி நல்ல முறையில் பதனீர் தயாரிக்கின்ற முறைகளைத் தெரிந்து கொள்ளலாம். அது தான் லாபம்.